IN THE COURT OF THE SUBORDINATE COURT, VANDAVASI
CASE NO: SOP.1/2023
DEPOSITION OF WITNESS: RW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name/பெயர் | : | ஜெகதீசன் | Caste/ஜாதி | : | |
| Father's/Husband's Name தந்தை/கணவர் பெயர் | : | சிவஞானம் | Calling/ தொழில் | : | |
| Village/கிராமம் | : | செய்யாறு | Religion/ சமயம் | : | |
| Taluk/தாலுக்கா | : | செய்யாறு | Age/வயது | : | 50 |

The witness sworn under Oaths Act 1969 on this the day of 20th day of January 2025.

**எ.மா.சா 2 குறுக்கு விசாரணை.**

நான் 25 வருடங்களாக மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். வந்தவாசியில் நான் 12 வருடங்கள் பணிபுரிந்தேன். செய்யாறில் 13 வருடங்கள் பணிபுரிந்தேன். நான் வேறு எந்த ஊரிலும் பணிபுரியவில்லை. சிவலிங்கம் என்னுடன் வந்தவாசியில் 3 வருடங்களும் செய்யாறில் 2 1/2 வருடங்களும் பணியாற்றினார். அவரும் மெக்கானிக்காக தான் பணியாற்றினார். இறுதியாக அவர் ஆரணியில் பணிபுரிந்தார். நான் ஆரணியில் அவருடன் பணிபுரியவில்லை. அவர் எந்த கிழமை இறந்தார் என்று எனக்கு தெரியவில்லை. அவர் 14.03.2015 அன்று காலமானார். சிவலிங்கத்தின் இறப்பு சான்றிதழில் அவருடைய முகவரி வந்தவாசியில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சிவலிங்கத்தின் முதல் மனைவி ஜான்சிராணியும் அவரது மகள் சரண்யாவின் பேரும் அவரது தந்தை மாசாணத்தின் பேரும் தான் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நேசம்மாள் சிவலிங்கத்தின் தாயார் ஆவார். வேறு நபர்கள் யாருடைய பெயரும் அந்த வாரிசு சான்றிதழில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். சரண்யா என்பவரின் பிறப்பு சான்றிதழில் தந்தை பெயர் சிவலிங்கம் என்றும் தாயார் பெயர் ஜான்சிராணி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சிவலிங்கத்தின் திருமணத்திற்கு நான் வரவில்லை. 04.07.1999 அன்று ஜான்சிராணிக்கும் சிவலிங்கத்திற்கும் திருமணம் நடைபெற்றதற்கான திருமண பதிதிரிக்கை தான் என்னிடம் காட்டப்படும் பத்திரிக்கை ஆகும். அவருக்கு செங்கல்பட்டில் திருமணம் நடைபெற்றதால் நான் திருமணத்திற்கு செல்லவில்லை. சிவலிங்கம் செங்கல்பட்டில் இருக்கும் போது யார் வீட்டிற்கு சென்று வருவார் என்று எனக்கு தெரியாது. அவர் பணி மாறுதல் பெற்று அதன் பின்னிட்டு வந்தவாசி வந்தார். வந்தவாசியில் பணிபுரியும் போது எதிர்மனுதாரர் வீட்டில் தான் அவர் இருந்தார். என் வீட்டிற்கு வந்து தான் எதிர்மனுதாரர் வீட்டிற்கு செல்வாரா என்றால் இல்லை.

செல்வராணிக்கு மெர்லின் மற்றும் ஜாக்குலின் என்று 2 பிள்ளைகள் உள்ளனர். அந்த குழந்தைகளின் தந்தை சிவலிங்கம் தான். எதிர்மனுதாரர் தனது எதிருரையில் அந்த பிள்ளைகளின் தகப்பனார் சேகர் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சிவலிங்கம் தான் அவர்களை வளர்தார். எதிர்மனுதாரரின் முதல் கணவர் பெயர் எனக்கு தெரியாது. 2ம் எதிர்மனுதாரர் பற்றியோ அவருடைய பிள்ளைகளை பற்றியோ எனக்கு எதுவும் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இறந்த சிவலிங்கம் பற்றியும் அவருடைய குடும்பத்தை பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்காக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றாலும் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

ஒம்/- எஸ்.சரண்யா
சார்பு நீதிபதி,
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.